# அறிவித்தல்

## இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் சாரதி சேவை தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்காக விண்ணப்பம் கோரல்.

1.0 இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவில் சாரதி சேவை தரம் III இல் நிலவும் 08 வெற்றிடங்களை நிரப்புவதற்காக இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் இல DSP/ இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆ.கு/அனுமதி/V மற்றும் 2018.07.18 ஆம் திகதி அனுமதியின் பிரகாரம் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2.0 கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின் பெறுபேறுகளுக்கு அமைய திறமை ஒழுங்கில் தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள விண்ணப்பதாரிகள் நிலவும் வெற்றிடங்களுக்கு நியமிக்கப்படுவர்.

3.0 இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவில் நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கை 13 ஆகும். நியமிக்கப்படும் எண்ணிக்கை, நியமனம் செயல்வலுப்பெறும் திகதி என்பன நியமன அதிகாரியினால் தீர்மானிக்கப்படும். ஏதேனும் எண்ணிக்கையிலான வெற்றிடங்களை அல்லது வெற்றிடங்கள் அனைத்தையும் நிரப்பாதிருப்பதற்கு நியமன அதிகாரிக்கு அதிகாரம் உண்டு.

4.0 சம்பளம் :- இல 03/2016 மற்றும் 2016.05.25 ஆம் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கைக்கு அமைய சாரதி சேவை தரம் III, II மற்றும் I ஆம் தரங்களுக்குரிய மாதாந்த சம்பள அளவுத்திட்டம் PL 3- 2016 ரூ.25,790-10x270-10x300-10x330- 12x350- ரூ.38990/- ஆகும். ரூ.28,490/- சம்பளப் படிமுறையை தாண்டிச் செல்வதற்கு தரம் II க்கான பதவி உயர்வையும் ரூ.31,490/- சம்பளப் படிமுறையை தாண்டிச் செல்வதற்கு தரம் I க்கான பதவி உயர்வையும் ரூ.34,790/- சம்பளப் படிமுறையை தாண்டிச் செல்வதற்கு விசேட தரத்துக்கான பதவி உயர்வையும் பெற்றுக்கொள்ளல் வேண்டும். மேற்படி சுற்றறிக்கையின் II ஆம் அட்டவணைப் படி சம்பளம் வழங்கப்படும்.

இந்த சம்பள அளவுத்திட்டம் 2020.01.01 ஆம் திகதியிலிருந்தாகும். 2018.01.01 ஆம் திகதி முதல் அடிப்படைச் சம்பளம் ரூ.20,462/- மற்றும் ரூ. 4629/- ஒப்பீட்டுக் கொடுப்பனவு வழங்கப்படும்.

5.0 இந்தப் பதவி நிரந்தரமானது ஓய்வூதிய உரித்துடையது. ஓய்வூதிய முறை தொடர்பாக அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் எடுக்கப்படும் கொள்கை தீர்மானங்களுக்கு கட்டுப்படுதல் வேண்டும்;. விதவைகள், அநாதைகள்/தபுதாரர்கள், அநாதைகள் ஓய்வூதிய நிதியத்துக்கு பங்களிப்புச் செய்தல; வேண்டும;. அரசாங்கத்தினால் காலத்திற்கு காலம் பிரகடனம் செய்யப்படும் முறைக்கு அமைய பங்களிப்புத் தொகை செலுத்துதல் வேண்டும்.

6.0 இந்தப் பதவிக்கு தெரிவுசெய்யப்படுமிடத்து விண்ணப்பதாரி 03 வருட காலம் இந்த ஆணைக்குழுவில் கடமையாற்றுதல் வேண்டும். ஆயினும் நியமன அதிகாரியினால் தீர்மானிக்கப்படும் ஏதேனும் விசேட காரணங்களின் பேரில் அந்த காலம் நிறைவடைவதற்கு முன்னர் எவரேனும் ஊழியரை இடமாற்றம் செய்வதற்கு தேவை ஏற்படுமிடத்து அதற்கான அதிகாரம் நியமன அதிகாரிக்கு உண்டு.

7.0 **தகைமைகள்** :

(அ) இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.

(ஆ) விண்ணப்பதாரி நல்லொழுக்கமுள்ளவராக இருத்தல் வேண்டும்.

(இ) கல்விப் பொதுத் தராதரச் சான்றிதழ் (சாதாரண தரம்) பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாமல் ஆகக் குறைந்தது சிங்களம் / தமிழ் மொழி உட்பட இரண்டு திறமைச் சித்திகளுடன் ஆறு பாடங்களில் சித்திபெற்றிருத்தல்.

(ஈ) தனியார் / வாடகை வாகனம் மற்றும் மொத்த நிறை 24 ஹொண்டருக்கு குறைந்த ஸ்டெஷன் வெகன் வாகனம் ஓட்டல் தொடர்பான அனுமதிப்பத்திரமொன்றைப் பெற்றிருத்தல் வேண்டும். (ஆட்சேர்க்கப்படும் இறுதித் திகதிக்கு மூன்று (03) வருடங்களுக்கு முன்னர் ஆகக் குறைந்தது சீ மற்றும் சீ 1 வாகன வகுப்பு அனுமதிப்பத்திரத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.)

(உ) நெடுஞ்சாலை ஒழுங்கு விதிகள் கோவைப் பற்றிய சிறந்த அறிவு இருத்தல் வேண்டும்.

(ஊ) வாகன சாரதியாக 03 வருட அனுபவம் இருத்தல் வேண்டும். (அனுபவம் சான்றிதழ்கள் மூலம் உறுதிப்படுத்தப்படுதல் வேண்டும்.)

(எ) ஆகக் குறைந்தது 5 அடி உயரம் இருத்தல் வேண்டும்.

(ஏ) பகல் மற்றும் இரவு நேரங்களில் சேவையில் ஈடுபடும் பொருட்டு உடல் ரீதியாக பொருத்தமான நிலையில் இருத்தல் வேண்டும். நல்ல கண் பார்வை இருத்தல் வேண்டும். (அரசாங்க மருத்துவர் ஒருவரால் வழங்கப்படும் முறையான சான்றிதழ் மூலம் அதனை உறுதிப்படுத்துதல் வேண்டும்.)

(ஐ) விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதிக்கு 18 வயதுக்கு குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.
தற்போது அரசாங்க சேவையில் நிரந்தர ஓய்வூதிய பதவி வகிப்பவர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.

சகல விண்ணப்பதாரிகளும் பதவிக்குரிய சகல தகைமைகளையும் விண்ணப்பம் கோரப்படும் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் பூரணப்படுத்தியிருக்க வேண்டியது கட்டாயமாகும்.

8.0 **தொழில் தேர்வு**

இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் அனுமதிக்கு ஏற்ப விண்ணப்பதாரிகளின் அடிப்படை தகைமைகளைப் பரீட்சிக்கும் நேர்முகப் பரீட்சை மற்றும் தொழில் தேர்வின் போது விண்ணப்பதாரிகள் பெற்றுக்கொள்ளும் புள்ளிகளின் திறமை ஒழுங்கை கண்டிப்பாக பின்பற்றி தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள விண்ணப்பதாரிகள் சாரதி சேவை தரம் III க்கு நியமிக்கப்படுவர்.

தொழில் தேர்வுப் பரீட்சையில் புள்ளி வழங்கும் திட்டம் பின்வருமாறு.

| | பாடங்கள் | உச்ச புள்ளிகள் | சித்திப் புள்ளிகள் |
|---|---|---|---|
| (i) | வாகனம் ஓட்டும் திறன் | 40 | 20 |
| (ii) | வீதி ஒழுங்குகள் பற்றிய செயல்முறை அறிவு | 40 | 20 |
| (iii) | மோட்டார் இயந்திரவியல் பற்றிய அடிப்படை அறிவு | 20 | 10 |

குறிப்பு – பதவியில் பெற்றுள்ள அனுபவம், கல்வித் தகைமைகள் என்பன ஏற்றுக்கொள்ளப்பட்ட சான்றிதழ்கள் மூலம் உறுதிப்படுத்தப்படல் வேண்டும். அந்த தகைமைகள் விண்ணப்பம் கோரப்படும் இறுதித் திகதிக்கு செல்லுபடியானவைகளாக இருத்தல் வேண்டும்.

9.0 விண்ணப்பத்தை நிரப்பும் போது மிகவும் கவனமாக சரியான தகவல்களை வழங்குதல் வேண்டும். தகைமைகளைப் பரீட்சிக்கும் போது எவரேனுமொரு பரீட்சார்த்தி தகைமையற்றவரென தெரியவருமிடத்து எச்சந்தர்ப்பத்திலும் அவரது பரீட்சார்த்த தகைமை இரத்துச் செய்யப்படும். விண்ணப்பதாரரொருவரினால் சமர்ப்பிக்கப்படும் ஏதேனுமொரு தகவல் எச்சந்தர்ப்பத்திலேனும் பொய்யானதென தெரியவருமிடத்து அவர் அரசாங்க சேவையிலிருந்து பதவி நீக்கம் செய்யப்படுவார்.

10.0 விண்ணப்பப்படிவத்தை செ.மி. 22-29 A4 அளவிலான தாளில் தெளிவாக மாதிரி விண்ணப்பப்படிவத்துக்கு அமைவாக விண்ணப்பத்தை தயாரித்துக்கொள்ளல் வேண்டும். மாதிரி விண்ணப்பபடிவத்தை ஒத்திராத விண்ணப்பப் படிவங்கள் மற்றும் பூரணமற்ற விண்ணப்பப் படிவங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். உரிய முறையில் விண்ணப்பப்படிவத்தை தயாரிக்காத காரணத்தினால் ஏற்படும் நட்டத்தை விண்ணப்பதாரியே பொறுப்பேற்றல் வேண்டும்.

10.1 விண்ணப்பம் அனுப்பப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் **"சாரதி தரம் III பதவிக்காக ஆட்சேர்ப்பு"** என தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும்.

10.2 இந்த அறிவித்தலின் இறுதியிலுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்தை பின்வரும் திகதிக்கு முன்னர் பணிப்பாளர் நாயகம், இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு இல 36, மலலசேகர மாவத்தை, கொழும்பு 07 எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி : 2018.09.27

11.0 இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள விண்ணப்பதாரிகள் உரிய திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் விண்ணப்பித்திருக்குமிடத்து மாத்திரம் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகத்தினால் தொழில் தேர்வுக்கு அழைக்கப்படுவர். ஆயினும் அவ்வாறு விடுக்கப்படும் அழைப்பு அவர் இப்பதவிக்கு தகுதிபெற்றுள்ளார் என்பதை ஏற்றுக்கொள்ளப்பட்டதாக அமையமாட்டாது. விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு ஆட்சேர்ப்பு அறிவித்தலுக்கு அமைய தகைமைகளைப் பரீட்சிக்கும் சந்தர்ப்பத்தில் தேவையான தகைமைகளைப் பெற்றிருக்கவில்லையென தெரியவருமிடத்து அவரது பரீட்சார்த்த தகைமை இரத்துச் செய்யப்படும்.

12.0 பரீட்சார்த்திகளின் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்கு பின்வரும் ஆவணங்களில் ஒன்றை நேர்முகப் பரீட்சை சபைக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

i. ஆட்களைப் பதிவுசெய்யும் திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ள செல்லுபடியாகும் தேசிய ஆள் அடையாள அட்டை.

ii. செல்லுபடியாகும் கடவுச் சீட்டு.

13.0 இங்கு குறிப்பிடப்படாத ஏதேனும் விடயம் இருப்பின் அது தொடர்பாக இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் தீர்மானிக்கப்படும். சகல விண்ணப்பதாரிகளும் இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள பொதுவான சட்டதிட்டங்களுக்கு அமைய செயற்படுவதற்கு கட்டுப்பட்டுள்ளனர்.

இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின்
கட்டளைப் படி,

சனாதிபதி சட்டத்தரணி சரத் ஜயமான்ன
பணிப்பாளர் நாயகம்.

2018 ...09... ஆம் திகதி.28

இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை
புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு
இல. 36,
மலலசேகர மாவத்தை,
கொழும்பு 07.

மாதிரி விண்ணப்பப்படிவம்

அலுவலக உபயோகத்திற்கு மாத்திரம;

| |
|---|
| |

**இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் சாரதி சேவை தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்காக விண்ணப்பம்**

1. முதலெழுத்துக்களுடன் பெயர் : ........................................................................................

2. முழுப் பெயர் : ........................................................................................

3. தேசிய அடையாள அட்டை இல :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

4. நிரந்தர முகவரி : ........................................................................................

5. சாரதி அனுமதிப்பத்திர இலக்கம் : ..........................................................

6. பிறந்த திகதி : வருடம் [ ][ ][ ][ ] மாதம் [ ][ ] நாள் [ ][ ]

7. தொலைபேசி இலக்கம் : ........................................................................................

8. விவாகமானவரா / விவாகமாகாதவரா : ..........................................................

9. உயரம் : அடி :........................ அங்குலம் :......................

10. கல்வித் தகைமைகள் :
    - க.பொ.த (சா. தரம்)

முதல் தடவை பெறுபேறு வருடம்:................ சுட்டெண் : ............................

| பாடம் | பெறுபேறு | பாடம் | பெறுபேறு |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

இரண்டாம் தடவை பெறுபேறு வருடம்: ..................... சுட்டெண் : .....................

| பாடம் | பெறுபேறு | பாடம் | பெறுபேறு |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

- க.பொ.த (உயர் தரம்) வருடம்: .............. சுட்டெண் :..........................

| பாடம் | பெறுபேறு |
|---|---|
| | |
| | |
| | |
| | |

11. வேறு தகைமைகள் :
    i. ..........................................................................................
    ii. ..........................................................................................
    iii. ..........................................................................................

12. தொழிற் தகைமைகள் :

..........................................................................................

..........................................................................................

13. பதவியில் பெற்றுள்ள அனுபவம்:

..........................................................................................

..........................................................................................

14. தாங்கள் எப்போதாவது ஏதேனுமொரு குற்றத்திற்காக நீதிமன்றமொன்றினல் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீரா? (ஆம் எனில் தகவல்களைத் தருக)

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

15. விண்ணப்பதாரியின் உறுதியுரை :-

அ. இந்த விண்ணப்பப்படிவத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் நான் அறிந்த வகையில் சரியானதும் உண்மையானதுமாகும் என்பதை கௌரவமாக குறிப்பிடுகின்றேன். இங்கு ஏதேனும் பகுதிகளை நிரப்பாமல் / தவறாக நிரப்பியதன் காரணமாக ஏற்படும் நட்டத்தைப் பொறுப்பேற்க சம்மதிக்கின்றேன். மேலும் இங்கு சகல பகுதிகளையும் சரியாக நிரப்பியுள்ளேன் என்பதை குறிப்பிடுகின்றேன்.

ஆ. என்னால் வழங்கப்பட்டுள்ள இந்த உறுதியுரை பொய்யானதென நிருபிக்கப்படுமிடத்து நியமனம் பெறுவதற்கு முன்னரெனின் தகைமையற்றவனாக்கப்படுவேன் என்றும் நியமனத்தின் பின்னர் எனின் சேவை நீக்கத்திற்கு ஆளாவேன் என்பதையும் நான் அறிவேன்.

இ. இங்கு குறிப்பிடப்பட்டுள்ள எந்தவித தகவலையும் பின்னர் மாற்றம் செய்யமாட்டேன்.

திகதி :

..............................................

விண்ணப்பதாரியின் கையொப்பம்